செ. கு. எண்: 193 நாள் : 22.07.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.7.2013

சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டை காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. H.யோகேந்திரன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 5.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், இருப்புப் பாதை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.தனசேகரன் அவர்கள் 12.6.2013 அன்று திருச்சிராப்பள்ளி ரயில் நிலையத்தில், ரயிலில் ஏறும் போது தவறி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.கோவிந்தராஜ் அவர்கள் 22.6.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கீரிப்பாறை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. டேவிட்ராஜ் அவர்கள் உடல் நலக் குறைவால் 23.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், கண்டமனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. T.பெரியசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் 8.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், காட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.ராஜ் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 10.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், தேனாடுகம்பை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.சீனிவாசமூர்த்தி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 12.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், பெருநகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு. E.சுப்பிரமணியன் அவர்கள் 13.7.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்த காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கோவிந்தராஜ், பெரியசாமி, ராஜ் மற்றும் சுப்பிரமணியன்; தலைமைக் காவலர்கள் தனசேகரன், டேவிட்ராஜ், சீனிவாசமூர்த்தி; மற்றும் முதல்நிலைக் காவலர் யோகேந்திரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ்; உடல் நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பெரியசாமி, ராஜ், சுப்பிரமணியன்; தலைமைக் காவலர்கள் யோகேந்திரன், சீனிவாசமூர்த்தி; டேவிட்ராஜ்; மற்றும் ரயிலிலிருந்து தவறி கீழே விழுந்த தலைமைக் காவலர் தனசேகரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்த மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**